Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 56

புதன்கிழமை
21 ஜனவரி 2026

தை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

புதன்பொய்கை



## கல்வி நடவடிக்கைகள் இன்று மீள ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 21
பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்றுடன் மீள ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
டித்வா புயலால் கைவிடப்பட்ட »04



## மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிக்க அரசு முயற்சி!

### சுமந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 21
மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகின்றது என்று, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலர் சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். »15

தமிழரசு - ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இணைந்து

# தமிழர்களின் அபிலாஷையுடனான ஆவணத்தைத் தயாரிக்க முயற்சி!

### ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 21**

**புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வரும் காலச்சூழலில், தமிழரசுக் கட்சியும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து, தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஆவணமொன்றைத் தயாரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளன.** »15

உரிய அனுமதி பெறாவிடில்

## இராணுவச் சிற்றுண்டிச்சாலையை மூடுவதற்கு நடவடிக்கை பாயும்

### பருத்தித்துறை நகரசபை அதிரடி

யாழ்ப்பாணம், ஜன. 21
பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் செயற்பட்டுவரும் இராணுச் சிற்றுண்டிச் சாலையில் புகைத்தல் பொருள் கள் விற்பனையைத் தடை செய்வதென்றும், உரிய அனுமதி பெறப்படாவிடில் அதனை மூடுவது எனவும் பருத்தித்துறை நகரசபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
பருத்தித்துறை நகரசபையின் 2026 ஆம் ஆண் »15

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றான

## அரசைப் பாதுகாக்கும் சட்டத்தில் மிகவும் ஆபத்தான அம்சங்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 21
பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டுவரப்படும், 'பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தில்' மிகவும் ஆபத்தான அம்சங்கள் உள்ளன என்று சுட்டிக் காட்டப்பட் »15

இரண்டு வீதிகளைத் தவிர

## காணிகள் எவற்றையும் விடுவிக்கவில்லை அநுர

### அபகரிப்புகளே நடக்கின்றன சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 21
ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில், இரண்டு வீதிகளைத் தவிர காணிகள் எவையும் விடுவிக்கப்படவில்லை - இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முக்கியஸ்தர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுர அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந் »15

## பயங்கரவாதத் தடைச்சட்டம்; புதிய சட்டம் அவசியமில்லை

### சட்டத்தரணி குருபரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 21
நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாக புதிய சட்டங்கள் எவையும் அவசியமில்லை என்று சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி க.குருபரன் »15



## வடதாரகைப் படகை இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 21
நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே வடதாரகைப் படகை மீண்டும் இயக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட பிராந்தியக் »15

## பிரதமருக்கு எதிரான பிரேரணை; கைவிடும் பேச்சுக்கே இடமில்லை



கொழும்பு, ஜன. 21
பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதில் உறுதியுடன் உள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.
பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு எதிர்க்கட்சிகள் அச்சப்படுகின்றன என்று, ஆளும் தரப்பு »15



முச்சந்தி முராரி

"முந்தி எங்களைக் கதிகலங்க வைச்சவையை இப்ப கடை கூட வைக்கவிடாம கலைக்கிறதுக்கு பேர்தான் கர்மா கண்டியளோ"

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவரான

## தம்பித்துரை முத்துக்குமாரசாமி அமெரிக்காவில் காலமானார்!

யாழ்ப்பாணம், ஜன. 21
ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆலோசகருமான தம்பித்துரை முத்துக்குமாரசாமி அமெரிக்காவில் நேற்றுக் காலமானார்.
ஈழ விடுதலை இயக்கம் 1975ஆம் ஆண்டு உருவாக்கம் பெற்றபோது முத்துக்குமாரசாமி தலைவராகச் செயற்பட்டு வந்தார். »04



நம்பிக்கையில்லாப் பிரேரணையில்

## எதிர்க்கட்சிகளின் பலவீனம் அம்பலம்

### அமைச்சர் பிமல் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 21
பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் எதிரணியின் பலவீனம் புலப்படுகின்றது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க »15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஆணையை கேலிக்கூத்தாக்கச் சதி

## 'பிரஜாசக்தி' திட்டம் தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டம்

**யாழ்ப்பாணம், ஜன. 21**

**பிரஜாசக்தி திட்டத்தின் ஊடாக, மக்களின் ஆணையையும், மக்களின் முடிவையும் கேலிக்கூத்தாக்கும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முக்கியஸ்தர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம மட்டங்களில் தனது கட்சிப் பிரமுகர்களை நியமித்து, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களை ஓரங்கட்டும் முயற்சியில் ஆளும்கட்சி ஈடுபட்டு வருகின்றது. உள்ளாட்சி சபைகள் எனப்படுபவை அடிப்படையில் மாகாணசபைகளுக்காக ஒதுக்கப்பட்ட விடயம். மாகாணசபைகள் தற்போது இயங்காத நிலையில், இந்த வாய்ப்பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்த நினைப்பதும் செயற்படுவதும் கண்டிக்கத்தக்கது. பிரஜாசக்தி ஊடாக வழங்கப்படும் அனைத்து நியமனங்களும் இல்லாமல் செய்யப்பட வேண்டும். ஏனெனில் உள்ளாட்சி உறுப்பினர்களுக்கும், அரச மேல்மட்ட உறுப்பினர்களுக்கும் தெரியாமல் ஒரு பிரதிநிதி ஊடாக தமது திட்டத்தை கொழும்பில் இருந்து செயற்படுத்தலாம் என எண்ணுகின்றனர். இதைத் தடுத்து நிறுத்த நாங்கள் கடும் முயற்சிகளை மேற்கொள்வோம் - என்றார்.

(அ-ம-26)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை | 0788 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| V | 1 7 4 4 9 4 |

## Super Ball

| திகதி | தினம் |
|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3054 | D | 24 28 45 55 |

## சனிதா

| திகதி | தினம் |
|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| F | 24 28 29 57 | 5215 |

## SASIRI

| திகதி | தினம் |
|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0884 | 23 30 35 |

## லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை |

| மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 07 22 49 59 | 4766 |

## KAPRUKA

| திகதி | தினம் |
|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| F | 28 | 02 32 48 64 | 2230 |

## அத கோடிபதி

| திகதி | தினம் |
|---|---|
| 20.01.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| G | 13 21 32 45 | 2880 |

## யாழ்ப்பாண உரை சர்ச்சை; ஜனாதிபதி மீது முறைப்பாடு

கொழும்பு, ஜன.21

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரை, இனங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்து, அவருக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

'பிவிதுரு ஹெல உறுமய' அமைப்பின் இளைஞர் விவகாரச் செயலாளர் குமார ராஜரத்ன தலைமையிலான குழுவினர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

பௌத்த மக்கள் வடக்கு நோக்கி வருவது குரோதத்தைப் பரப்புவதற்கே என்ற தோரணையில் அமைந்துள்ளது. இத்தகைய பேச்சுகள் தமிழ்மக்களிடையே சிங்கள மக்கள் மீது தேவையற்ற பகையை உருவாக்கும் என்றும், இது நாட்டின் ஐக்கியத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் என்றும் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த வேண்டாம்

*ரவி கருணாநாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.21

இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டுமாயின், நீண்டகாலமாக இழுபறியிலுள்ள மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டுக்குள் அரசாங்கம் நடத்தியே ஆகவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அரசியலமைப்பிற்கு உட்பட்டுச் செயற்படுகிறது என்றால், ஏன் தேர்தலை நடத்துவதற்குத் தயங்குகிறது?

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே தேர்தல் நடத்தப்பட்டிருக்கவேண்டும். அப்போது அதற்குத் தேவையான நிதி வசதிகளும் காணப்பட்டன.

ஜனநாயக ரீதியான ஆட்சியை நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம், தேர்தலை நடத்தித் தனது வார்த்தையைக் காப்பாற்றவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## எடுத்தோம் கவிழ்த்தோமென கல்வியில் விளையாடாதீர்கள்

*கூறுகிறார் மேர்வின்*



கொழும்பு, ஜன.21

கல்வி மறுசீரமைப்பை ஒரே நாளில் செய்ய முடியாது. முறையாக அதற்குரிய பணி இடம் பெறவேண்டும் என்பதே எனது கோரிக்கை என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி மறுசீரமைப்பு அவசியம். அது எமது கலாசாரம் மற்றும் எமது நாட்டுக்கே உரிய வகையில் இடம் பெறவேண்டும். சர்வமதத் தலைவர்கள், துறைசார் நிபுணர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாடவேண்டும்.

பெற்றோரிடமிருந்தும் கல்வி மறுசீரமைப்பு பற்றி ஆலோசனை பெற வேண்டும் - என்றார்.

(ச-44)



தாயக அறக்கொடை நிறுவனத்தால் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் 150 குடும்பங்களுக்குப் பொங்கல் பொதிகளும், 180 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்துறை ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ. 30,000

## உயர்த்தாவிடின் முறைப்பாடளிக்கலாம்

**கொழும்பு, ஜன.21**

**2025ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க தேசிய குறைந்தபட்ச ஊதிய திருத்தச்சட்டத்தின்படி, தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச மாத ஊதியத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இந்தப் புதிய சம்பள உயர்வு 2026 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் எச்.எம்.டி.என்.கே. வட்டலியத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறைந்தபட்ச தினசரி ஊதியம் 1,080 ரூபாவிலிருந்து 1,200 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டமானது நிரந்தர ஊழியர்களுக்கு மட்டுமன்றி, இடைத்தரகர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியமர்த்தப்படும் ஊழியர்களுக்கும் கட்டாயம் செயற்படுத்தப்படவேண்டும்.

சம்பள அதிகரிப்புடன் சேர்த்து ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் அறக்கட்டளை நிதி, கூடுதல் நேரக்கொடுப்பனவு, பணிக்கொடை, மகப்பேறு ஊதியம் மற்றும் விடுமுறை ஊதியம் ஆகிய அனைத்து சட்டபூர்வ கொடுப்பனவுகளையும் முறையாக வழங்குவதற்கு நிறுவனங்களின் முதலாளிகளே பொறுப்பாவார்கள்.

புதிய ஊதிய உயர்வை வழங்கத் தவறும் அல்லது சட்டத்தை மீறும் முதலாளிகள் தொடர்பாக ஊழியர்கள் முறைப்பாடு அளிக்கலாம். cmslabourdept.gov.lk என்ற இணையத்தளம் ஊடாகவோ அல்லது எழுத்துபூர்வமாக அருகிலுள்ள தொழிலாளர் அலுவலகத்தில் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம்- என்றார். (ச-இ)

## 'குஷ்' போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.21

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியுடைய 'குஷ்' போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வந்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற இலங்கை விமானப் பயணி ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் போதைப்பொருள் தொகையை மலேசியாவில் எடுத்து சிங்கப்பூருக்கு சென்று, அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். (ச)

## மூத்த கல்வியியலாளர் துரைராசா மறைவு



யாழ்ப்பாணம்,ஜன.21

வரணி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர், மற்றும் வரணி கொத்தணிப் பாடசாலைகளின் முன்னாள் அதிபராக நீண்ட காலங்கள் கடமையாற்றிய, சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் சிற்றம்பலம் துரைராசா தனது 88ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார். தென்மராட்சி வரணியைச் சேர்ந்த இவர், பல கல்வியிலாளர்களையும், பல்துறை சார்ந்தவர்களையும் உருவாக்கியுள்ளார்.

இவரது இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை வரணி இடைக்குறிச்சியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (க-66-131)



## தீ விபத்தில் காயமடைந்த பெண் சாவு

கிளிநொச்சி,ஜன.21

தீ விபத்தில் சிக்கி படுகாயமடைந்திருந்த இளம் குடும்பப் பெண் ஒருவர், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். புளியம்பொக்கணை கலவெட்டித் திடலைச் சேர்ந்த பரணிதரன் சானுகா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட தீ விபத்தின் போது இவர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## தேனிலவு இடங்களில் காலி மாவட்டம் தெரிவு

கொழும்பு, ஜன.21

சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பயண இணையத்தளமான 'Tripadvisor', 2026ஆம்ஆண்டுக்கான உலகின் மிகச்சிறந்த சுற்றுலாத் தலங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் இலங்கை ஐந்தாவது சிறந்த நாடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், காலி மாவட்டம் தேனிலவுக்கான சிறந்த இடங்களில் உலக அளவில் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. புதுமணத்தம்பதிகள் தேனிலவு செல்வதற்கு உலகிலேயே மிகச்சிறந்த 10 இடங்களை Tripadvisor பட்டியலிட்டுள்ளது. அதில் காலி மாவட்டம் 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக, காலியின் 16ஆம் நூற்றாண்டு காலத்துக் கோட்டை மற்றும் பாரம்பரியக் கட்டடக்கலையும், நவீன காலத்து சொகுசு விடுதிகளும் தேனிலவு தம்பதியினரை வெகுவாகக் கவர்ந்துள்ளன. (ச-இ)




## கம்பஸுக்குள்ள கருப்பாடுகள்

மழைவிட்டும் தூவானம் விடாதமாதிரி உந்த மெடிக்கல் பக்கல்டியில, 3எஸ் எடுத்த சிங்களப் பிள்ளை 2 மாதம் படிச்ச விசயம் தான் கம்பஸில பத்தியெரியுதாம். 'எங்களுக்கே தெரியாத விசயம் என்னெண்டு பட்சிக்கு தெரிஞ்சது?' எண்டு கம்பஸ் மேல் மட்டங்கள் கதைக்கினம். அதைவிட இதைமாதிரி முந்தியும் சிலர் இப்பிடிப் பதிவில்லாமல், றிசல்ட் இல்லாமல் வந்து படிச்ச விசயங்களும் கிளறுப்படுகுது எண்டும் கதை.

சயன்ஸ் பக்கல்டியில ஒரு பெடியனும் பெட்டையும் இப்பிடிப் பதிவொண்டுமில்லாமல் படிச்ச கதையையும், இஞ்ச வேவுபாக்கத்தான் அவையை இன்ரலிஜெண்ட்காரர் அனுப்பினவை எண்டும் நேற்றுப் பட்சி சொன்னதெல்லோ. அதைப்பற்றி கொஞ்சம் விலாவாரியான விசயங்கள் கிடைச்சிருக்குது. சயன்ஸ் பக்கல்டியில மட்டுமில்லை, சிங்களப் பிள்ளையள் படிக்கிற எல்லாப் பீடங்களிலையும் இன்ரலிஜெண்ட்காரர் தங்களுக்குத் தகவல் தாறதுக்கெண்டு ஆக்களை வைச்சிருக்கினம். வழக்கமா கம்பஸ் கிடைச்சு வர்ற சிங்களப் பிள்ளையளையே தங்களுக்குத் தகவல் தாற ஆக்களா மாத்துறதுதான் அவையிண்ட பிளான்.அப்பிடி ஆக்கள் கிடைக்காத பீடங்களுக்குத்தான் இப்பிடிப் பதிவில்லாமல் சிங்களப் பெடி, பெட்டையளை இறக்கி, வேவு பாக்கினமாம்.

தமிழ்ப் பெடியளை இப்பிடிக் களவா, பதிவில்லாமல் படிக்க வைக்கேலாது. ஏனெண்டால், தமிழ்ப் பெடிபெட்டையள் எந்த இடம்? எங்க படிச்சவை? என்ன றிசல்ட்? எண்டு எப்பிடியோ தெரியவந்திடும். விடுப்பு அறியிறதில நாங்கள் விண்ணரெல்லோ. ஆனால் சிங்களப் பிள்ளையளெண்டால் இப்பிடி அவையின்ர நதிமூலம், ரிஷிமூலம் அறியிறது அவ்வளவு ஈஸியில்லை. அதோட இன்ரலிஜெண்ட்காரருக்கு தமிழாக்களை விடவும் சிங்கள ஆக்களிலதான் நம்பிக்கைகூட. அதாலதான் தங்கட செலவிலேயே அவையை கம்பஸில படிக்கிறமாதிரி செட் பண்ணி அனுப்புகினம். படிப்புச் செலவு போக, மாதம் மாதம் அவைக்குச் சம்பளமும் குடுக்கினம். அவையும் வாங்கிற சம்பளத்துக்கு வஞ்சகம் செய்யாமல் மாவீரர் தினம் கொண்டாட ஏற்பாடு செய்யிறது ஆர்? எப்ப எங்க நினைவேந்தல்கள் நடக்கப்போகுது? மாணவர் ஒன்றியம் என்னென்ன செயற்பாடுகளைச் செய்யப்போகுது? எண்டு ஒண்டும்விடாமல் தகவல் எடுத்து அனுப்புவினமாம். இப்ப மெடிக்கல் பக்கல்டிக்கு வந்த மாணவியும் இப்பிடி இன்ரலிஜெண்ட்காரர் செற் பண்ணி அனுப்பிவைச்ச ஆளோ? இல்லாட்டி அவா தங்கட ஊரில 'நானும் டொக்டருக்குப் படிக்கிறன்' எண்டு சீன் போடத்தான் வந்தவாவோ? எண்டு ஆருக்கும் தெரியாமல் கிடக்கு. அண்டைக்குப் பிடிபட்ட பிறகு அந்தப் பிள்ளை ஹொஸ்டலிலையும் இல்லையாம். உடனேயே மூடைமுடிச்செல்லாம் கட்டிக்கொண்டு கம்பிநீட்டிட்டுது போல. 'அந்தப் பிள்ளையை ஒண்டும் செய்யவேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்ளுறம்' எண்டு யூ.ஜீ.சி.க்காரர் கம்பஸ்காரருக்குச் சொன்னதாயும் ஒரு கதை அடிபடுகுது. ஆனால் அது உண்மையோ எண்டு உறுதியாத் தெரியேலை. அப்பிடி யூ.ஜீ.சி.க்காரர் சொல்லியிருந்தால், உந்தப் பிள்ளைக்குப் பின்னால ஏதோவொரு 'பெரிய கை' சம்பந்தப்பட்டிருக்கு எண்டுதான் அர்த்தம்.எப்பவோ ஒருநாளைக்கு எல்லாம் வெளிக்கும் தானே, அப்ப பாப்பம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும்.

**கன்னி:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்.

**மகரம்:** உடல் நலனில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். இலாபம் குறைவாகவே கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** ஆதாயகரமான நாள். குடும்பத்தினர் ஆதாயம் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

## தம்பித்துரை...

பின் நாள்களில் இவர் புலம் பெயர்ந்து அமெரிக்கா சென்றார். சட்டத்தரணியான இவர், அம்னெஸ்டி இண்டர்நேஷனலின் அமெரிக்காவின் சர்வதேச வழக்கறிஞர் பிரிவின் இயக்குநராகவும், மனித உரிமைக் கண்காணிப்பாளராகவும், உலகம் முழுவதும் உள்ள அகதிகள் முகாம் களின் இயக்குநராகவும் பணியாற்றினார். அமெரிக்காவின் தேர்தல் கண்காணிப்பாளராகவும் செயற்பட்டார். அத்துடன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஐ.நா. விடயங்கள் தொடர்பாக ஆலோசகராகவும் செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

## கல்வி...

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்காக பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, இன்று முதல் மீளவும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

(அ-ம)

# மதுபோதைக்கு எதிரான விழிப்புணர்வு நாடகம்!

யாழ்ப்பாணம், ஜன.21

தற்கால இளம் சமுதாயம் மதுபோதைக்கு அடிமையாகும் சமூகச் சீரழிவை எடுத்தியம்பும் விழிப்புணர்வு நாடகம் பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தாதியர்கள் ஒன்றுகூடும் 'தாதியர் சங்கமம் 2025' நிகழ்வில் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தாதியர் நலன்புரிச் சங்கத்தை சேர்ந்தவர்களால் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. (எ-41-100)



## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## INVITATION FOR BIDS - IFB 2026/01
### Council Fund

A. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified in following Table.

B. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

C. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall need the following requirements and the additional details are provided in the bidding data sheet (Section II)
   01) Bidders shall have valid business registration
   02) Bidders shall also register themselves with the registrar of public contracts Sri Lanka, in terms of the public contract act no 03 of 1987 for the contracts exceeded Rs 5Mn.
   03) If the major parts of the system products are manufactured locally by the supplier, the supplier should be registered under ministry of Industries and the registration certificate shall be submitted along with the compliance letter / certificate issued by the central environmental Authority where the product meet the required environ mental standard.

D. Interested eligible bidders may obtain further information from the Chairman, Valikamam South Praddeshiya sabha, Chunnakam Conduct No (021 224 4045/0017) e mail address- worksvsps@gmail.com, during the office hours and inspect the Procurement documents at the same address any working days for 9.00am to 3.00pm.

E. A complete set of Procurement documents in English language may be purchased by interested bidders on the submission of "Application for Procurement Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 21.01.2026 to 10.02.2026 during 09.00 Hours to 15.00 Hours. The mode of payment will be by cash.

F. Bids must be delivered to Chairman, Valikamam south Pradeshiya sabha, K.K.S road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 Hours of 11.02.2026. Late bids will be rejected. Bids will be opened immediately after closing in the presence of bidders or their representatives who choose to attend.

G. Bid shall be valid for a remind 91 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 119 days from the bid opening.

H. Pre-bid meeting will be held at Conference Hall, Valikamam south Pradeshiya Sabha, Chunnakam commencing at 10.00 am on 29.01.2026.

I. Divisional Procurement committee will have the right to make final decision in the regarding the acceptance or rejection of bids.

| Bid security validity Period | 09.06.2026 | | | |
|---|---|---|---|---|
| Pre-Bid Meeting | 29.01.2026 – 10.00 AM | | | |
| Bid Opening & Closing | 11.02.2026 – 10.30AM | | | |
| Reference No | Item | Qty | Nonrefundable fees | Bid Security |
| NP/14/41(15)/02/05/CF/2026/01-Inci | Supply and Installation of Waste Incinerator with Flue gas treatment system at Koththiyalady Solid waste Management Center of Valikamam South Pradeshiyasabha, Chunnakam. | 01 | 5,000.00 | 250,000.00 |

Chairman,
Divisional Procurement Committee,
Valikamam South Pradeshiya Sabha,
Chunnakam.

21.01.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# பற்றுக்கோடாக மாறிய அறிக்கை

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மௌனித்து 16 ஆண்டுகளைக் கடந்த பின்பும், அந்தப்போரில் நேர்ந்த போர்க்குற்றங்களுக்கு நீதிகிட்டாத நிலையில் உள்ள தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புதிய அறிக்கை ஒரு சிறிய நம்பிக்கைக் கீற்றாக மாறியுள்ளது. 'நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் - நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்' என்ற அந்த அறிக்கையின் தலைப்பு, பாதிக்கப்பட்ட மக்களின் மனப்புண்ணை உலகுக்கு பறைசாற்றுகிறது. மோதல்களின் போதும் அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் என்பவை தற்செயலான சம்பவங்கள் அல்ல, அவை திட்டமிட்டு ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டன என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அந்த அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நீண்டகாலமாகக் கூறிவந்த இந்தக் குமுறல்கள் இப்போது சர்வதேச ஆவணமாக மாறியுள்ளன. ஆனால், கடந்த கால அனுபவங்களை வைத்துப் பார்க்கையில், இத்தகைய அறிக்கைகள் வெறும் காகித வடிவத்தோடு நின்றுவிடுமா? அல்லது குற்றவாளிக் கூண்டில் உண்மையான போர்க் குற்றவாளிகளை நிறுத்துமா? என்பதே இன்று எம்முன்னால் உள்ள பெரும் கேள்வியாகும்.

வெறுமனே ஒரு அறிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் கதவுகளை அவ்வலவு இலகுவாகத் தட்டிவிடமுடியாது. இலங்கை ரோம் உடன்படிக்கையில் கையொப்பமிடாத நாடு என்பதால், ஐ.நா. பாதுகாப்புச்சபையின் பரிந்துரை இன்றி நேரடியாகச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவது சிக்கலானது. இருப்பினும், இந்த அறிக்கை ஒரு வலுவான 'ஆதாரத் தொகுப்பாக' அமையும் என்பதில் ஐயமில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கீழ் இயங்கும் 'பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்' ஏற்கனவே சேகரித்துள்ள தகவல்களுடன் இந்த அறிக்கையை இணைப்பதன் மூலம், சர்வதேச நியாயாதிக்கம் உள்ள நாடுகளின் ஊடாகத் தனிப்பட்ட போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் வழக்குகளைத் தொடரமுடியும். மேலும், சர்வதேச நீதிமன்றம் ஊடாக ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீதான மீறல்களை விசாரிக்கக் கோரலாம். இதற்கு இந்த அறிக்கையிலுள்ள சாட்சியங்கள் மிக முக்கியமான கருவியாக அமையும்.


இந்தத் தருணத்தில் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் சிதறி நின்று குரல் கொடுப்பதைத் தவிர்த்து ஒரு பொதுவான செயற்றிட்டத்தின்கீழ் இணையவேண்டும். இந்த அறிக்கையை ஒரு ஆதாரமாகப் பயன்படுத்தி, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற செல்வாக்குள்ள நாடுகள் இலங்கை மீதான தங்களின் அழுத்தங்களை அதிகரிக்கச் செய்யத் தூதரக ரீதியான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டும். அரசியற்கட்சிகள் வெறும் அறிக்கைகளுடன் நிற்காமல், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரு சர்வதேச மக்கள் தீர்ப்பாயத்தின் ஊடாக போர்க்குற்றங்களை உலகறியச் செய்யவேண்டும். இந்த அறிக்கை வழங்கியுள்ள ஆறுதல், உண்மையான நீதியாக மாற வேண்டுமானால், சர்வதேச சமூகம் இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகளைத் தாண்டிச் சர்வதேசத் தலையீட்டைக் கோரும் ஒரு பலமான மக்கள் திரள் எழுச்சியை நாம் கட்டியெழுப்பவேண்டும். போர்க்குற்றங்களுக்கு நீதிகேட்டு திசை தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்த தமிழினத்துக்கு இந்த அறிக்கை ஒரு பற்றுக்கோடாகக் கிட்டியுள்ளது. இதனைச் சரிவரப் பற்றிப்பிடித்து, நீதியை அடையும் வழியையும், போர்க்குற்றவாளிகளுக்கான தண்டனையையும் பெற ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய வரலாற்றுத் தருணம் இது. இந்தச் சந்தர்ப்பத்தையும் தவறவிடுவோமானால் பின்னர் எப்போதுமே எமக்கு நீதி என்பது எட்டாக்கனி என்பதை எல்லோரும் புரிந்துசெயற்பட வேண்டும்.



## பொய்யாமொழி

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு**

**பொருள்:** ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும், உயர்வாகவும் இடம் பெறும்.



# சிறுவர்கள் மத்தியில் வைரஸ் நோய்கள்!



சுகாதாரத்துறை எச்சரிக்கை

**கொழும்பு, ஜன.21**

**இலங்கையில் தற்போது நிலவிவரும் குளிர்ச்சியான மற்றும் வறண்ட வானிலை காரணமாக, சிறுவர்கள் மத்தியில் பல்வேறு வைரஸ் நோய்கள் வேகமாகப் பரவிவருவதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.**

இந்த வைரஸ்கள் பிரதானமாக மனித சுவாசத்தொகுதியின் மேற்பகுதியையே தாக்குகின்றன.

குறிப்பாக முன்பள்ளி செல்லும் சிறுவர்கள் இந்த நோய்த்தாக்கத்துக்கு அதிகளவில் ஆளாகின்றனர். வைரஸ் தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களிடம் காய்ச்சல், இருமல், தடிமன், கடுமையான தொண்டை வலி மற்றும் தலைவலி, தசை வலி, வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு என்பன அறிகுறிகளாகக் காணப்படுகின்றன.

இந்த அறிகுறிகள் மூன்று நாள்களுக்கு மேல் நீடித்தாலோ அல்லது சிறுவர்களுக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டாலோ, தாமதிக்காமல் உடனடியாக மருத்துவமனையை நாடவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## இரத்தினபுரியில் அதிவெப்பம்!

இரத்தினபுரி, ஜன.21

இலங்கையில் நிலவி வரும் வறட்சியான வானிலை காரணமாக, கடந்த திங்கட்கிழமை நாட்டின் அதிகபட்ச வெப்பநிலை இரத்தினபுரியில் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இரத்தினபுரி வானிலை நிலையத்தில் 32.9 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளது.

கட்டுநாயக்க மற்றும் மத்தல ஆகிய பகுதிகளில் வெப்பநிலை சுமார் 31.2பாகை செல்சியஸாகக் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கையிலிருந்து விழுந்த குழந்தை உயிரிழப்பு

களுத்துறை, ஜன.21

தந்தையின் கையில் இருந்த இரண்டரை மாதக் குழந்தை கீழே விழுந்து தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் களுத்துறை அலுபோமுல்ல பகுதியில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் குழந்தையின் தந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

## 32 கிலோ கஞ்சா; களனியில் மீட்பு!

கொழும்பு, ஜன.21

களனி, அங்கொட வீதிப்பகுதியில் 32 கிலோகிராம் கேரளக் கஞ்சாவை களனிப் பிராந்திய குற்ற விசாரணைப் பணியகம் கைப்பற்றியுள்ளது. சந்தேகத்துக்கிடமான மோட்டார் வாகனம் ஒன்றைச் சோதனையிட முற்பட்டவேளையில், அதிலிருந்த சந்தேகநபர்கள் குறித்த கஞ்சாத் தொகையைத் வீதியில் கைவிட்டுத் தப்பிச்சென்றபோதே இந்தக் கஞ்சா தொகை மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)



## வாகன இறக்குமதி வருவாயில் சாதனை!

இலங்கையில் வாகன இறக்குமதி மூலம் எதிர்பார்க்கப்பட்டதைவிட இருமடங்கு வருமானத்தை அரசாங்கம் ஈட்டியுள்ளதாக பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் நிஷாந்த ஜெயவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். எதிர்பார்த்த வருமானம் 441 பில்லியன் ரூபாவாகக் கணிக்கப்பட்ட நிலையில் 904 பில்லியன் ரூபா இதுவரை கிடைத்துள்ளது.

வாகன இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், சுங்கம் மூலமாக அரசாங்கத்துக்கு மிகப் பெரிய வருவாய் கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - தை 08
22.01.2026
சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 02.05 - 03.35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணை வர்த்தக சங்க புதிய நிர்வாகம் தெரிவு!

நீண்டகாலமாக நிர்வாகத் தெரிவின்றி முடங்கியிருந்த, வேலணை வர்த்தக சங்கத்துக்குப் புதிய நிர்வாகம், வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நேற்றுமுன்தினம் தெரிவு செய்யப்பட்டது.

நிர்வாக சபை இல்லாது இயங்கு நிலையில் இல்லாத வர்த்தக சங்கம் தொடர்பில், நகர்ப்பகுதி வர்த்தகர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவந்திருந்தனர். குறித்த விடயம் பிரதேசசபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த நிலையில் அதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் வர்த்தகர்கள் அழைக்கப்பட்டு, வர்த்தக சங்கத்தின் கூட்டம் வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. குறித்த நிர்வாகத்தில் தலைவராக புலேந்திராசா பாலசிறிதரன், செயலாளராக சண்முகராசா சவீதன், பொருளாளராக புலேந்திரன் கஜன், உப தலைவராக கந்தசாமி சிவகுமார், உப செயலாளராக கந்தசாமி கணேசராசா ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக நாகதீபன், பிரதீபன், ஜீவராஜ், வசீகயன் பாஸ்கரன், தனுசன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (சு-20)

# வட்டு. மத்தியகல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப விழா

வட்டு. மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா ஆரம்ப நிகழ்வுமற்றும்பொங்கல்விழாகல்லூரியில்நேற்றுமுன் தினம் நடைபெற்றது. நடைபவனி, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் உள்ள சரஸ்வதி திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, பொங்கல் பூசைகள் இடம்பெற்றன. இறை வழிபாடுகளுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது பாடசாலையின் நிறுவுநரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன. (சு-27)






# அபிராமிப்பட்டர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.21

'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய அபிராமிப் பட்டர் உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 . 03 . 1964

உதிர்வு 31 . 01 . 2025

அமரர்

**பேராசிரியர் கலாநிதி அம்பலம் புஸ்பநாதன்**

(வவுனியாப் பல்கலைக்கழகம், இலங்கை)

மாதங்கள் பன்னிரண்டு கடந்ததுவோ
மாறவில்லை எம் துயரம்
ஆனாலும் எங்கள் இதயம்
இன்றுதான் உங்களை இழந்தது போல் துடிக்கிறது.
உங்கள் குரல் கேட்காத காலை
உங்களுடன் பேசாத நாட்கள்
எண்ணிக்கையாகி விட்டன
ஆனாலும் உங்களை நினைக்காத ஒரு நொடியும் இல்லை
பேராசான் நீங்கள் உங்கள் ஞானத்தால்
நான் திரும்பி வந்துவிடுவேன் என்று சொன்ன குரல்
இன்றும் எம் காதுகளில் ஒலிக்கின்றது
எங்கள் வீடு சத்தமில்லாது மௌனமாய் இருக்கிறது
உங்கள் சிரிப்பின்றி
நல்வழி காட்டிய உங்கள் கருணையை
பேறாகப் பெற்றோம் பெருமையும் கொண்டோம்
நீறாகிப் போனாலும் நீங்களே எங்கள் திசைகாட்டி
உங்கள் நினைவுகளைச் சுமந்து
உங்கள் பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

செல்வமஹால், அல்வாய்.
புவி அகம், வவுனியா

என்று உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/60508) J-1



## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## சபை நிதி - 2026/01

1. வலிகாமம் தெற்கு பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள கறுப்புப் பட்டியலில் (Black List) பெயர் இடம் பெறாதவராயும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
   " விலைக்கேள்வியாளர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இலங்கையின் பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் தங்களைப் பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவின் மூலச் சான்றிதழ் (PCA 03) கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்."
4. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **தவிசாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017இ தொலைநகல் 021-2240327, e.mail – vspsch@gmail.com)** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை **2026.01.21 - 2026.02.05** காலப்பகுதியில் **மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில்** சமர்ப்பித்து **ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2026.02.06 திகதி 10.30 மணிக்கு முன்னர் **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அன்றையதினமே 10.30 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் 77 நாட்களாகவும், கேள்விப் பிணை தேவைப்படும் காலம் 105 நாட்களாகவும் காணப்படும்.
7. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2026.01.28 அன்று நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் | 22.05.2026 | | | |
| விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் | 28.01.2026 | | | |
| கேள்வி திறத்தல் | 06.02.2026 | | | |
| **கேள்வி அடையாள இல** | **பொருள் விபரம்** | **அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்)** | **மீளளிக்கப்படாத தொகை** | **கேள்விப் பிணை** |
| NP/14/41(15)/03/Street Light/2026/01 | வீதி விளக்குகள் கொள்வனவு | 10.00 | 3,500.00 | 100,000.00 |

**தவிசாளர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

2026.01.21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு வளங்களை மேம்படுத்துவோம்

## வடக்கு ஆளுநர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

**வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்யப் பல தரப்பினர் ஆர்வம் காட்டிவரும் நிலையில், அதற்கேற்ற அடிப்படை வசதிகளை உருவாக்குவது எமது தலையாய பொறுப்பு என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களம், வரவு - செலவுத் திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவினருக்கும், ஆளுநருக்கும் இடையிலான விசேட சந்திப்பு யாழ். சுண்டுக்குளியில் உள்ள ஆளுநர் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆகியும் கிராமப்புற வீதிகள் மற்றும் தீவகப் போக்குவரத்து வசதிகள் இன்னும் பின்தங்கியே உள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவர இவற்றை மேம்படுத்துவது அவசியம்.

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான நீண்ட பயண நேரம் சுற்றுலாத் துறைக்குப் பெரும் சவாலாக உள்ளது. எனினும், இந்தியாவுடனான நேரடி வான் மற்றும் கடல்வழித் தொடர்புகள் நம்பிக்கையைத் தந்துள்ளன.

வடக்கின் மூலப்பொருள்கள் வெளியே கொண்டு செல்லப்பட்டு, மீண்டும் முடிவுப் பொருள்களாக இங்கே விற்பனைக்குவரும் நிலை மாறவேண்டும். இங்கேயே தொழிற்சாலைகளை உருவாக்கி 'பெறுமதிசேர் பொருள்களை' தயாரிக்கவேண்டும். உலக வங்கியின் 'புத்துயிர்த் திட்டம்' தற்போது யாழ்ப்பாணத்தில் மட்டுமே முன்னெடுக்கப்படுகிறது. இதனை வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி வடக்கில் 'முதலீட்டாளர் மாநாடு' நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு அடிப்படை வசதிகளைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துவது அவசியம்- என்றார். (ச-66)




## மாற்றாற்றல் இளைஞரின் தன்னம்பிக்கைப் பயணம்

மன்னார், ஜன. 21

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சமூக ஒற்றுமை மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை வலியுறுத்தி, மாற்றாற்றலுடைய இளைஞர் சக்கர நாற்காலியில் இலங்கை முழுவதுமான சுற்றுப்பயணத்தை நேற்று மன்னாரில் இருந்து ஆரம்பித்துள்ளார்.

வவுனியா, சூடுவந்தவெண் குளம் பகுதியைச் சேர்ந்த மக்கின் முகமது அலி என்ற இளைஞரே இந்தச் சாதனைப் பயணத்தில் ஈடுபட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பயணம், இலங்கையின் கடற்கரையோரங்களை மையமாக வைத்து சுமார் 1,500 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கடக்கவுள்ளது. இவர் வடமாகாண சக்கர நாற்காலி கிரிக்கெட் அணியின் தலைவராகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)



## தென்னைச் செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்புச் செயற்றிட்டங்கள்

முல்லைத்தீவு, ஜன. 21

ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக, தென்னைச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டங்கள் முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தென்னைச் செய்கையை அதிகரிக்கும் நோக்கில், சுதந்திரபுரம் கிராமத்தில் 35 பயனாளிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபா வீதம் பராமரிப்பு நன்கொடையும், 5 ஆயிரத்து 500 தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் சுனிமல் ஜெயகொடி பயனாளிகளுக்கு இவற்றை வழங்கினார்.

ஆரம்ப நிகழ்வில் தென்னைப் பயிர்ச்செய்கை அதிகாரசபையின் பொதுமுகாமையாளர் அத்தில விசயசிங்க, பிரதிப்பொதுமுகாமையாளர் எஸ்.ஜெயலத், உதவிப் பொது முகாமையாளர் தே.வைகுந்தன், புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலர் திருமதி சென்சிகா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-19)

அரியாலை சுதேசிய திருநாள் தைப்பொங்கல் விழா நிலைய முன்றலில் சிறப்பாக இடம்பெற்றது. (ச-17)





வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட எந்திரி எஸ்.விமலேஸ்வரன், கிளிநொச்சி நகரில் உள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார். (க-113)





இலங்கை பௌத்த, சமய கலாசார விவகார அமைச்சின், தொலைக்காட்சித் துறைசார் புலமைசார் ஆய்வுக்கான தேசிய விருது, தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஸ்ரீபிருந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளது. (க)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 21

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, சிறப்புச்சொற்பொழிவு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் முற்பகல் 11 மணிக்கு ஆலயப் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். சைவ வாழ்வியலில் கிரியைகள், சடங்குகளின் முக்கியத்துவம் எனும் தொனிப்பொருளில் இடம்பெறும் சொற்பொழிவை சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், சி. கா. கமலநாதன், செ. த. குமரன், பொன். சந்திரவேல், ஏ. அனுசாந்தன், க. கைலநாதன் மற்றும் இளஞ்சைவப் புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன் ஆகியோர் ஆற்றுவர். (க)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 21

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருவார். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தியாவில் மேலதிக கற்றல் வழிகாட்டல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.21
இந்தியாவில் மேலதிக கற்கைகளுக்கான, வழிகாட்டல் கண்காட்சி யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையில், சிகரம் மற்றும் சேப் நிறுவனங்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்தன.
நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக துணைத்தூதுவர் சாய்முரளி, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், இந்தியாவின் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(க-66)

## பொங்கல் விழாவும் உழவர் கௌரவிப்பும்

மன்னார், ஜன.21
மன்னார் மாவட்டச் செயலக அலுவலர்கள் ஏற்பாடு செய்த தமிழர்களின் பாரம்பரியப் பண்டிகையான சூரியப்பொங்கல் விழா மற்றும் உழவர் கௌரவிப்பு மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றன.
மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர், பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது நடன நிகழ்வுகள், உழவர் கௌரவிப்பு, பரிசளிப்பு என்பன இடம்பெற்றன. (ச-41-56)




## ஆட்கள் தேவை

"விழாக்களுக்கு கண்கவர் அலங்காரங்களை" உருவாக்க துணைபுரியு எங்கள் குழுவில் இணையுங்கள்!
யாழ். நகரில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்கான அலங்காரப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு குழு உறுப்பினர்கள் தேவை.
முன் அனுபவம் தேவையில்லை, ஆர்வமும், பொறுமையும், கடின உழைப்பும் போதும். ஒரு குழுவாகச் செயல்பட்டு, படைப்பாற்றலை வெளிப்படுத்த சிறந்த நபர்களை எதிர்பர்கிறோம்.
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
அடிப்படை வருமானம் 45000
**தொடர்புக்கு: 077 20 18 833**
(CS 31056) A

## ஏலிம் முன்பள்ளி, மானிப்பாய்

(குறைந்த கட்டணத்தில் உயர்தர கல்வி)
புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்

2026ம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்

- Play School
- Lower Kinder Garden
- upper Kinder Garden
- ஆங்கிலப்பயிற்சி
- இணைப்பாடவிதான செயற்பாடுகள்
- Electrution

அனுபவமுள்ள திறமையான ஆசிரியர் குழாமினால் கற்பிக்கப்படும்


தொடர்புகளுக்கு:-
திருமதி. சசிகலா ரவீந்திரன்
முகாமையாளர்
ஏலிம் சிறுவர் இல்லம்
மெமோரியல் வீதி, மானிப்பாய்.
(077 611 2498)

விண்ணப்ப முடிவுத்திகதி:-
15.02.2026


## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 09 . 1941

மறைவு
19 . 01 . 2026



### சண்முகம் சரஸ்வதி

யாழ் புத்தூரைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சரஸ்வதி அவர்கள் கடந்த (19.01.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பு சண்முகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, கந்தசாமி அகியோரின் பாசமிகு சகோதரியும், மகேஸ்வரி (லண்டன்), கோமதி, காலஞ்சென்ற கோபாலராசா மற்றும் மாலினி (லண்டன்), தயாபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேந்திரன், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ஜெகநாதன், திருவருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகிசா, சுகிசா, கனியோன் - நிரோஜிதா, கஜிவன், கஜந்தன், சாருசன், சமிலன், பிரணிதா, சயனவி, அட்சிதா ஆகியோரின் பேர்த்தியும், ஷரணவியின் அன்பு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2026) புதன்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.


தகவல்: குடும்பத்தினர்
077 644 6646

(CS/60511) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 10 . 1940

மறைவு
20 . 01 . 2026



### சரவணமுத்து சிதம்பரநாதன்

(ஓய்வுபெற்ற உதவி கல்வி பணிப்பாளர், முன்னாள் பிராந்திய இணைப்பாளர் – குடும்ப புனர்வாழ்வு நிலையம்)

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிதம்பரநாதன் அவர்கள் கடந்த 20.01.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் யசோதாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், திவ்யலக்ஷ்மி (மருந்தாளர் – ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று), திவ்யரூபி (ஆசிரியர் – வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்), யசோதாகிருஷ்ணா (மருத்துவர் – ஆதார வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஜனன் (தாதிய பொறுப்பதிகாரி, CANE - புற்றுநோய் பராமரிப்பு காப்பகம்), காலஞ்சென்ற சிந்துஜன், மற்றும் லக்ஷனா(மருத்துவர் – ஆதார வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சேயோன், ஆதிரா, வர்ஷா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2026) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 38, நெல்லியடி வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 461 7081

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில்தான் தங்கியிருக்கிறது.

நெப்போலியன் போனபார்ட்

# புதன் பொய்கை

21.01.2026
புதன்கிழமை


# மண் சுமந்த மேனிகளாக.....



# மலையகத்தின் மௌனக் கண்ணீர்!

○ சண்சியா வரதராசன்

இலங்கையின் மத்திய மலைநாட்டின் எழில் கொஞ்சும் தேயிலைத் தோட்டங்களின் பசுமைக்குப் பின்னால், இருநூறு ஆண்டுகால துயர வரலாறு ஒன்று புதைந்து கிடக்கிறது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு, இன்றுவரை உரிமைகள் மறுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கமாக வாழ்ந்து வருபவர்கள் மலையக மக்கள். அவர்களின் வாழ்வாதாரமே தேயிலைக் கொழுந்து பறிப்பதுதான். இந்நிலையில், அண்மையில் தாக்கிய 'டித்வா' புயலும், அதனைத் தொடர்ந்த கோரமான மண்சரிவுகளும் ஏற்கனவே பலவீனமாக இருந்த அவர்களின் வாழ்வை நொடிப்பொழுதில் சூறையாடி, ஒரு மாபெரும் மனித அவலத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

**வியர்வை சிந்திய கைகள்.. மண்ணில் புதைந்த உறவுகள்**

மலையக மக்கள் என்போர் வெறும் தொழிலாளர்கள் மட்டுமல்லர்; அவர்கள் இத்தேயத்தின் பொருளாதார முதுகெலும்புகள். விடியற்காலை பனியில் தொடங்கி அந்தி சாயும் வரை அட்டைக்கடிகளுக்கும் மேடுபள்ளங்களுக்கும் மத்தியில் கொழுந்து பறிக்கும் இவர்களின் கைகளிலும் கால்களிலும் எப்போதும் சேறும், மண்ணும், தேயிலைச் சாறுமே படிந்திருக்கும். நாம் ரசிக்கும் ஒவ்வொரு கோப்பை தேநீரின் பின்னும் இவர்களின் வியர்வையும் இரத்தமும் கலந்திருக்கிறது. மிகக் குறைந்த கூலியில் கடும் உழைப்பைச் சிந்தும் இவர்கள், நாட்டின் வளர்ச்சிக்கு ஈடு இணையற்ற பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக, இவர்களின் வசிப்பிடங்கள் 'லயன் அறைகள்' எனப்படும் குறுகலான குடியிருப்புகளே. போதிய பராமரிப்போ, பாதுகாப்போ இன்றி மலைச்சரிவுகளில் அமைந்துள்ள இந்த அறைகள், இயற்கை அனர்த்தங்களின் போது மரணப்பொறிகளாக மாறுகின்றன. 'டித்வா' புயல் நுவரெலியா, கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களை நிலைகுலையச் செய்தபோது, வரலாறு காணாத கனமழை பெய்தது. மழைநீர் பூமிக்குள் ஊடுருவி, வலுவிழந்த மலைச்சரிவுகளை உடைத்தெறிந்தபோது, பல தசாப்த கால கனவுகள் வெறும் மண்சுமந்த மேனிகளாக மண்ணுக்குள் புதைந்து போயின.

**600 உயிர்கள்.. தீராத வடு**

அனர்த்த முகாமைத்துவ மையத்தின் அறிக்கைகளின் படி, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 600ஐத் தாண்டிவிட்டது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இன்னும் கண்டறியப்படவில்லை. அன்பான உறவுகள், பிள்ளைகள், முதியவர்கள் எனப் பலரின் உயிர்கள் மண்ணோடு மண்ணாகின. "சிறுகச் சிறுகக் கொழுந்து பறித்துச் சேமித்த காசுகள் இன்று உரிமையாளர் இன்றி கிடக்கின்றன" என்ற வரிகள், இந்த அவலத்தின் உச்சபட்ச வலியை உணர்த்துகின்றன. தங்கள் பிள்ளைகளின் கல்விக்காகவும், ஒரு சிறு வீட்டுக்காகவும் அவர்கள் வியர்வை சிந்திச் சேமித்த ஒவ்வொரு ரூபாவும் இன்று சேற்றுக்குள் புதைந்து கிடக்கின்றன.

> **"பசுமை போர்த்திய மலைகளின் பின்னால் புதைந்து கிடக்கும் 200 கால துயரம். நாம் ரசிக்கும் ஒவ்வொரு கோப்பை தேநீருக்குப் பின்னாலும் ஒரு வர்க்கத்தின் ரத்தமும் வியர்வையும் கலந்திருக்கிறது."**

**வெறும் நிவாரணம் தீர்வல்ல; வாழ்வுரிமையே தேவை!**

பாதைகள் துண்டிக்கப்பட்டதாலும், வெள்ளப்பெருக்கினாலும் நிவாரண உதவிகள் பல இடங்களுக்குச் சென்றடைவதில் பெரும் தாமதம் ஏற்பட்டது. இது போன்ற அனர்த்தங்கள் நடக்கும்போது மட்டும் அனுதாபம் காட்டுவது ஒரு தீர்வாகாது. பல தசாப்தங்களாக மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் இவர்கள் வாழ்வது தெரிந்திருந்தும், பாதுகாப்பான மீள்குடியேற்றத் திட்டங்கள் ஏன் இன்னும் இழுத்தடிக்கப்படுகின்றன என்ற கேள்வி இன்று வலுப்பெற்றுள்ளது.

**இனிவரும் காலங்களில் இத்தகைய பேரழிவுகளைத் தவிர்க்க வேண்டிய அவசரத் தேவைகள்:**

- **பாதுகாப்பான வீடமைப்பு:** அபாயம் நிறைந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பான, தனித்தனி வீட்டு வசதிகளை உறுதி செய்ய வேண்டும்.
- **ஆரம்ப எச்சரிக்கை பொறிமுறை:** நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய மண்சரிவு எச்சரிக்கை கட்டமைப்புகளை மலைநாட்டின் மூலைமுடுக்கெங்கும் கொண்டு செல்ல வேண்டும்.
- **சமூகப் பாதுகாப்பு:** வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகள் மற்றும் நிலையான வருமான வழிகளை உருவாக்கித் தர வேண்டும்.

'டித்வா' புயல் என்பது வெறும் இயற்கைப் பேரிடர் மட்டுமல்ல; அது மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாமல் இருப்பதன் விளைவாக விழுந்த பேரிடி. அவர்களின் கண்ணீரைத் துடைக்க வெறும் பருப்பு மூடைகளும், போர்வைப் பொதிகளும் போதாது. மாறாக, இந்த மண்ணில் அவர்கள் சமத்துவமான, கௌரவமான மற்றும் பாதுகாப்பான வாழ்வுரிமையைப் பெறுவதே டித்வாவில் பறிபோன அந்த 600 ஆத்மாக்களுக்கும் நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க.பிரணவசுதன்

# அடியார் அழிபசி தீர்க்கும் 'சந்நிதியான் ஆச்சிரமம்'!

ஆன்மிகம் என்பது ஆலயங்களுக்குள் மட்டும் அடங்குவதல்ல, அது மனிதனின் பசியையும் பிணியையும் போக்குவதில்தான் உயிர்ப்படைகிறது என்பதை உலகுக்கு உரக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறது தொண்டைமானாறு 'சந்நிதியான் ஆச்சிரமம்'. 1996ஆம் ஆண்டு ஒரு சிறிய ஆன்மீகத் தளமாகத் தனது பயணத்தை ஆரம்பித்த இந்த ஆச்சிரமம், இன்று ஈழத் தமிழர்கள் வாழும் திசையெங்கும் படர்ந்து விரிந்து, ஒரு மாபெரும் மனிதாபிமான விருட்சமாக நிமிர்ந்து நிற்கிறது.

**அன்னப்பணியிலிருந்து வாழ்வாதாரம் வரை**

'அன்னதானம்' என்பது சந்நிதியான் ஆச்சிரமத்தின் பிரதான உயிர்நாடி. ஆனால், பசி ஆற்றுவதோடு இவர்களது பணி நின்றுவிடவில்லை. நலிவுற்ற குடும்பங்களைக் கண்டறிந்து, அவர்கள் சுயதொழில் மூலம் தலைநிமிர்ந்து வாழ வாரம் தோறும் முறையான வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றனர். வெறும் மீன்களைக் கொடுப்பதை விட, மீன் பிடிக்கத் தூண்டில் கொடுப்பதே சிறந்தது என்ற தத்துவத்தை இவர்கள் களத்தில் மெய்ப்பித்து வருகிறார்கள்.

அரச மருத்துவமனைகளில் நிலவும் மருந்து மற்றும் உபகரணத் தட்டுப்பாடுகளை நீக்குவதில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பங்கு அளப்பரியது. யாழ். போதனா மருத்துவமனை தொடங்கி மந்திகை, தெல்லிப்பழை, சங்கானை, அராலி கோட்டைக்காடு என மாவட்டத்தின் முக்கியமான மருத்துவமனைகளின் அவசரக் கோரிக்கைகளுக்கு ஓடோடிச் சென்று உதவும் ஒரு 'நிரந்தரத் தொண்டனாக' இவ்வாச்சிரமம் செயற்படுகின்றது.

**கல்வியில் ஒரு கலங்கரை விளக்கம்**

..

வறுமை காரணமாக ஒரு மாணவனின் கல்விக்கனவு கலைந்துவிடக் கூடாது என்பதில் ஆச்சிரமம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. கற்றல் உபகரணங்கள், சத்துணவு வழங்குவதோடு நின்றுவிடாமல், பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாமல் தவிக்கும் 200க்கும் மேற்பட்ட வறிய மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல, வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கற்கும் மாணவர்களின் தங்குமிடப் பிரச்சினையைத் தீர்க்க, புன்னாலைக்கட்டுவனில் 25 அறைகளைக் கொண்ட நவீன விடுதி ஒன்றையும் நிர்மாணித்து வருகின்றது.

**எல்லைகளைக் கடந்த ஈரம்**

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டாலும், இவர்களது கரங்கள் வன்னி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை எனத் தமிழர்கள் வாழும் தாயக நிலப்பரப்பு முதல் மலையகம் மற்றும் அனுராதபுரம், பொலநறுவை வரை நீண்டுகொண்டே செல்கின்றன. இனம், மதம், பிரதேசம் கடந்து எங்கு தேவையிருக்கிறதோ, அங்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவிப் பொருட்கள் வந்து சேர்கின்றன.

**'ஞானச்சுடர்' முப்பது ஆண்டுகால அறிவுப் பயணம்**

ஆச்சிரமத்தின் கலை மற்றும் ஆன்மீகப் பணிகளில் 'ஞானச்சுடர்' இதழ் ஒரு மைல்கல் லாகும். 334 மாதங்களாகத் தடையின்றி, 334 இதழ்களைக் கடந்து இந்த அறிவொளிப் பயணத்தைத் தொடர்வது ஒரு சாதனை. ஆச்சிரமத்தின் 'சைவகலை பண்பாட்டுப் பேரவை' ஊடாக வெளியாகும் இந்த இதழ், ஈழத்து அறிஞர்களின் சிந்தனைகளையும் கவிதைகளையும் ஆவணப்படுத்தும் ஒரு பொக்கிஷமாகத் திகழ்கிறது.

வெறும் பூசைகளும் சடங்குகளுமே ஆன்மீகம் என்று கருதிய சமூகத்தில், 'மக்களின் சேவையே மகேசன் சேவை' என்பதை சந்நிதியான் ஆச்சிரமம் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் நிரூபித்து வருகிறது. ஒரு சமுதாயத்தை அறிவாலும், ஆரோக்கியத்தாலும், பொருளாதாரத்தாலும் கட்டியெழுப்பும் இவர்களது பணி, எதிர்காலத் தமிழ் சமூகத்துக்கு ஒரு வலுவான அத்திபாரமாகும்.

## செல்வராணி

பங்களா அருகில் இறப்பர் மரக்கூட்டம்
நேற்றும் முழு இரவும்
குத்தகை எடுத்திருந்தது மழை


செல்வராணியின் நிறையின் மரங்களில்
பால் சிரட்டைகள் இடத்திற்கிடம்

மலைமேல் லயத்திலிருந்து
அவளது மெலிந்த பிள்ளை குட்டிகள்
ஒற்றையடிப்பாதை நோக்கி ஓடி வருவதே
நான் கொண்டுவருகின்ற லெவரியா சாப்பிட
பால் மரத்து வெட்டின் நடுவே
இறப்பர் பால் வழிந்தோடுவது போல

மாசி மாதத்துக் கோடைக் காற்றுக்கு
சிவந்திட்ட இறப்பர் இலைகள்
உதிரும்போது நிலம் நோக்கி
பங்களா சமைலறையில்
அறுசுவைகளும் கிடைக்கும்

சின்னஞ் சிறுசுகளுக்கு
அப்படியானதொரு வேளை
திடீரெனச் சூழவும் பெய்த மழைக்கு நனைந்து
இடித்த இடிக்கோ தெரியாது
சரியாக ஒரு மாதத்தில்
அதோ செல்வராணிக்கு குமட்டுகிறதாம் மீண்டும்

சிங்களத்தில் நயோமி அமரசிங்ஹ
-தமிழில் இப்னு அஸ மத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் இலவசப் பாடப் புத்தகங்களும் மாணவர்களின் திறன்விருத்தியும்

சு.மேனகன்
இரண்டாம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவன்
கல்வி. பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கையின் பாடசாலைக் கல்வி முறையில் பாடப்புத்தகங்கள் கற்றல், கற்பித்தல் செயல்முறையின் அடிப் படைக் கருவிகளாக உள்ளன. மாண வர்களுக்கு பாடத்திட்ட அறிவை வழங் குவதிலும் தேசியத் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதி லும் அவை முக்கியமான பங்காற் றுகின்றன. ஆசிரியர் மையக்கற்றல் முறையில் பாடப்புத்தகம் அறிவின் பிரதானமூலமாக விளங்குகிறது.

ஆனால் 21ஆம் நூற்றாண்டின் கல்வி நோக்கம் வெறும் அறிவளிப் பைத் தாண்டி விமர்சன சிந்தனை, பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், படைப்பாற்றல், தொடர்பாடல் திறன் மற்றும் குழு வேலைத்திறன் போன்ற பல்வேறு வாழ்க்கைத்திறன்களை மாணவர்களிடையே வளர்ப்பதாக உள்ளது. இந்தச் சூழலில் இலங்கை யின் பாடப்புத்தகங்கள் மாணவர் களின் திறன் விருத்திக்கு முழுமை யாக பங்காற்றுகின்றனவா? என்ற கேள்வி எழுகிறது.

இலங்கையின் பாடப்புத்தகங்களை ஆராய்ந்தால் பெரும்பாலானவை மனப்பாடக் கற்றலையும், பரீட்சை மையப்படுத்தப்பட்ட உள்ளடக்கத் தையும் முன்னிலைப்படுத்துவதைக் காணலாம். கருத்துகள் தெளிவாக விளக்கப்பட்டாலும் அவற்றை வாழ்க் கைச் சூழல்களுடன் இணைத்து சிந்திக்கவும் செயற்படுத்தவும் மாண வர்களுக்குப் போதிய வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. செயற்பாட்டுக் கற்றல் திட்ட அடிப்படையிலான பணி கள் மற்றும் ஆராய்ச்சி சார்ந்த கேள்வி கள் குறைந்த அளவிலேயே இடம்பெ றுகின்றன. பிற நாடுகளின் கல்வி முறையுடன் எமது கல்விமுறையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறிப்பிடத் தக்க வேறுபாடுகள் தென்படுகின்றன. உதாரணமாக: பின்லாந்து நாட்டில் பாடப்புத்தகங்கள் வழிகாட்டிக் கருவி களாக மட்டுமே பயன்படுகின்றன. மாணவர்கள் குழுக் கலந்துரையாட,ல் திட்டப் பணிகள் மற்றும் வாழ்க்கைச் சிக்கல் தீர்வுச் செயற்பாடுகள்மூலம் கற்றுக்கொள்கிறார்கள். அங்கு தேர்வு களைவிட திறன் வளர்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

அதேபோல் சிங்கப்பூர் கல்வி முறை யில் பாடப் புத்தகங்கள் அறிவைத் தொடங்கும் புள்ளியாக மட்டுமே உள்ளன. "வுாமைஇெ யீிடலஇ ஊச நயவந" என்ற அணுகுமுறையின் மூலம் மாணவர்களின் பகுத்தறிவு கணித மற்றும் அறிவியல் சிந்தனைத் திறன்கள் வளர்க்கப்படுகின்றன. பாடப் புத்தகங்களில் பல்வேறு சூழல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் செயன்முறைப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

ஜப்பான் போன்ற நாடுகளில் பாடப் புத்தகங்கள் ஒழுக்கம், ஒத்துழைப்பு மற்றும் பொறுப்பு உணர்வு போன்ற சமூகத்திறன்களை வளர்க்கும் வகை யில் வடிவமைக்கப்பட்டுள்ளன. வகுப்பறைக் கற்றலுடன் இணைந்து நடைமுறைச் செயற்பாடுகள் மற்றும் குழு வேலைக்கு அதிக இடம் வழங் கப்படுகிறது.

இந்த ஒப்பீட்டின் அடிப்படையில் பார்க்கும்போது இலங்கையின் பாடப் புத்தகங்கள் அறிவளிப்பில் வலுவான வையாக இருந்தாலும் திறன் மையப் படுத்தப்பட்ட கல்வி அணுகுமுறையில் இன்னும் முன்னேறவேண்டிய நிலை காணப்படுகிறது. நவீன டிஜிற்றல் திறன்கள், தொழில் முனைவுத்திறன் மற்றும் சமூகஉணர்ச்சித் திறன்கள் போன்றவை பாடப்புத்தகங்களில் போதிய அளவில் உள்ளடக்கப் படவில்லை.

முடிவாகப் பாரக்கும்போது, இலங் கையின் பாடப்புத்தகங்கள் மாண வர்களுக்கு அடிப்படை அறிவை வழங்குவதிலும் தேசியத் தேர்வுகளை எதிர்கொள்ளத் தயார்ப்படுத்துவதிலும் மறுக்கமுடியாத பங்கினை வகிக்கின் றன. எனினும் இன்றைய உலகம் எதிர்பார்க்கும் விமர்சனச் சிந்தனை, பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், படைப்பாற்றல், தொடர்பாடல் மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற வாழ்க் கைத்திறன்களை முழுமையாக வளர்க்கும் அளவிற்கு தற்போதைய பாடப் புத்தக அமைப்பு போதுமான தாக இல்லை என்பது தெளிவாகிறது.

அறிவு மையப்படுத்தப்பட்ட பாடப் புத்தகங்கள் மாணவர்களை தகவல் சேமிப்பவர்களாகவே மாற்றுகின்றன. ஆனால் திறன் மையப்படுத்தப்பட்ட கல்வி மாணவர்களை சிந்திப்பவர் களாகவும் செயற்படுபவர்களாகவும் உருவாக்குகிறது.

பிற நாடுகளின் கல்வி அனுபவங் கள் பாடப்புத்தகம் ஒரு வழிகாட்டிக் கருவியாக மட்டுமே இருந்து கற்றல் அனுபவம், செயற்பாடுகள் திட்டங்கள் மற்றும் வாழ்க்கைச்சூழல் அடிப்படை யில் அமையும்போது தான் மாணவர் களின் திறன் விருத்தி சாத்தியமாகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அத னைப்போல இலங்கையிலும் பாடப் புத்தகச்சுமையைக் குறைத்து திறன் மையப்படுத்தப்பட்ட செயற்பாட்டு மற்றும் டிஜிற்றல் ஆதரவு கொண்ட பாடப் புத்தகங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மதிப் பீட்டு முறைகளும் மனப்பாடத்தைவிட திறனை மதிப்பிடும்வகையில் மாற்றப் பட வேண்டியது அவசியமாகும்.

ஆகையால் பாடப்புத்தகங்களை மட்டும் குற்றஞ்சாட்டுவதோ அல்லது அவற்றை முழுமையான தீர்வாகக் கருதுவதோ சரியான அணுகுமுறை யல்ல. பாடப்புத்தகங்கள் ஆசிரியர் கற்றல் சூழல் மற்றும் மதிப்பீட்டு முறை ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்படும் போதுதான் மாணவர்க ளின் முழுமையான திறன் வளர்ச்சி சாத்தியமாகும். "வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனை யது உயர்வு" அதாவது நீரின் அள வுக்கேற்ப தாமரை வளர்வது போல, ஒரு மாணவன் தனக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை எவ்வளவு தூரம் பயன் படுத்துகின்றானோ அந்த அளவுக்கு அவனது திறன் உயரும்.

வளங்கள் இலவசமாகக் கிடைத்தா லும் மாணவனின் முயற்சியே முழு மையான பலனைத்தரும். எனவே இவ்வாறான மாற்றங்கள் நடைமு றைப்படுத்தப்படும்போது இலங்கை கல்வி முறை அறிவில் மட்டுமல்லாது திறனிலும் சிறந்த எதிர்கால உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய பொறுப்பான குடிமக்களை உருவாக் கும் ஒரு வலுவான அடித்தளமாக மாறும்.

## எனது வீடு யாரிடம்?

செ. சுதர்சன்



அன்பின் அநுர...!

எப்போதுதான் என்னிடம்
எனது வீடு இருந்தது?
எப்போதுதான் என்னிடம்
எனது முற்றம் இருந்தது?
எப்போதுதான் என்னிடம்
நம் எல்லோருக்குமான...
பொங்கல் இருந்தது?

நீயோ...
பொங்கல் உண்ண வருகிறாய்
உன் பரிவாரத்தோடு...

இனிப்பான பொங்கல் உண்ண...
உயிர் குடிக்கும்
கசப்பான ஆயுதங்களோடு
நீ வருகிறாய்...!

பொங்கலை
நான் ஆக்கிப் படைக்கும்
எனது முற்றமோ...
இன்னமும் உன்னிடம்!
அதுவும்...
உனது முட்கம்பி வேலிக்குள்...!

தர மறுக்கும் நீயோ...
இப்போதும் அதை வைத்திருக் கிறாய்!
அதை உன்னுடையது என்கிறாய்!
உனது முட்கம்பி வேலிக்குள்...
நீயே முகாமிட்டு இருக்கிறாய்...!

ஆனால்....
பொங்கல் ஆக்கும் நானோ...
முட்கம்பிகளுக்கு வெளியே
மிக அருகில் அல்ல...
சுமார்.....
நீண்டு தொலையும்
ஒரு நாற்பது ஆண்டுகாலத் தூரத் தில்
இருகிறேன்....
புரிவாயா....?

நீ கை நீட்டினாலும்....
உனது கைகளுக்கு
என் பொங்கல்
எட்டாத தூரத்தில்...
வந்தே சேராது...!

நான் தர முயன்றாலும்
ஊழிகள் நூறு கழிந்த பின்பும்
உன் கைகளுக்கு
வரவும் விடமாட்டேன்...!

ஏனெனில்...

நீயோ...
ஆட்சிக்கு வரும் முன்னர்
என் முற்றத்தைக் காட்டினாய்!
ஆட்சிக்கு வந்த பின்னர்
முள்வேலி கட்டினாய்!

நீ இப்போதும் வருகிறாய்!
பொங்கல் உண்ண என...
மோசமாக...
மிக மோசமாக...
மிகமிக மோசமாக....
சிறுதுளி வெட்கமும் இல்லாது!

உனக்கோ...
மரத்துப் போன நாக்கு
இருக்கிறது...!
அதைக்கொண்டு
நீ எப்படித்தான் சுவைப்பாய்?


செவிகொள்!

எனக்கோ...
நாவாகவும் ருசியாகவும்
எனது முற்றமே இருக்கிறது!
எப்போதும் சுவையாக
அது மாத்திரமே இருக்கிறது!
அதுவும் நினைவில் என்பதை
நீ செவிகொள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்விமுறைமையில் புதிய சீர்திருத்தம்

## அமுலுக்கு வரும் புதிய நடைமுறைகள்




**(நாட்டின் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் மறுசீரமைத்து வருகின்றது. இந்தப் பணிகள் எவ்வாறு அமைகின்றன? இதன் நோக்கமென்ன? இதன் செல்நெறி என்பது தொடர்பில் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சியே இது.)**

யோ.அ.தவநாயகம்

கனிஷ்ட இடைநிலை (தரம் 6-9), சிரேஷ்ட இடைநிலையின் முதல்நிலை (தரம் 10-11), சிரேஷ்ட இடைநிலையின் இரண்டாம் நிலை (தரம் 12-13). ஆகிய கட்டங்கள் ஒவ்வொன்றிலும் அறிவுத்திறன், தொழிற்றிறன் மற்றும் தொழில் வாழ்க்கைக்கான வழிகாட்டல் வழங்கும்வகையில் கலைத்திட்ட மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கட்டாய மற்றும் பொதுக்கலைத்திட்ட பாடத்தொகுதிக்கு மேலதிகமாக விரும்பும் பாடத்தில் ஆழமான அறிவைப் பெறல், விரும்பிய துறையைத் தெரிவுசெய்வதற்கான ஆரம்ப அறிவை விருத்தியாக்கல், தொடர் கற்றலுக்கான வாய்ப்புக்களுக்கு வசதியளிக்கும்வகையில் ஒவ்வொரு மட்டத்திலும் மேலதிக கற்றல் தொகுதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பாடப்பரப்பினூடாகக் கட்டியெழுப்பப்படும் நிலைமாற்றுத் திறன்களை வெளிக்கொணர்வதற்கான கற்றல்தொகுதி ஒன்றும் ஒவ்வொரு மட்டத்திலும் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மட்டத்திலும் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைவாக மாணவர்கள் தெரிவுகளை மேற்கொண்டு கற்கவேண்டியது அவசியமாக்கப்பட்டுள்ளது. இந்தக் கலைத்திட்டமானது ஆர்வமுள்ள அல்லது பொருத்தமான துறையைத் தெரிவுசெய்து அதில் ஆழமான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றது.

**தொழில்கற்றலின் அடிப்படை**

இந்தக் கற்றலானது உயர்கல்வி மற்றும் தொழிலுக்கான பாலமாக இருக்கும் என்பதுடன் மேலதிக ஆற்றல்களை வளர்க்கவும், மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவும் வகைசெய்வதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் பாடப்பரப்புக்களின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் நிலைமாற்றுத் திறன்களை வெளிக்கொணர்வதற்கான கற்றலானது வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைப் பெறுவதற்கு வளமான அடித்தளத்தை வழங்குவதன் மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கட்டியெழுப்புதல். விழுமியம் குடியுரிமையை வளர்த்தல் மற்றும் முழுமையான வளர்ச்சிக்குத் துணை செய்தல் என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. கனிஷ்ட மற்றும் சிரேஷ் இடைநிலை மட்டங்களின் அனைத்துத் தரங்களிலும் மொடியூல் அடிப்படையிலான கற்றல் அறிமுகப்படுத்தப்படுகின்றது. மொடியூல்கள் குறிப்பிட்ட தலைப்பு, கருப்பொருள், திறன் என்பனவற்றை உள்ளடக்கிய தன்னிறைவான கற்றல் அலகாக அமையும் வகையிலும், உள்ளடக்கம், செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் வரையறுக்கப்பட்ட கற்றல் விளைவுகளை அடையும் வகையிலும் வடிவமைக்கப்படுமென வலியுறுத்தப்படுகின்றது. ஒரு மொடியூலுக்கான கால அளவு பத்து மணித்தியாலமாகும். நிலமைகளுக்கேற்ப காலஅளவினை நெகிழ்வானதாக்க முடியும்.



ஒரு மொடியூலுக்கு ஒரு திறமைச்சித்தி என்றவாறாக பாடங்களுக்கான திறமைச் சித்திகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தவணை ஒன்றுக்கு பாடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள திறமைச்சித்திகளின் எண்ணிக்கைகளுக்கமைய தவணை ஒன்றுக்கான மொடியூல்களின் எண்ணிக்கை அமைந்திருக்கும். தவணை இறுதிப் பரீட்சை முறைமைக்குப் பதிலாக கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் மொடியூல் அடிப்படையில் பாடவேளையிலேயே நடாத்தப்படும். ஒரு தவணையில் ஒரு மொடியூலுக்கு இரண்டு தொடர்கணிப்பீடுகளும், இறுதிமதிப்பீடு ஒன்றும் மேற்கொள்ளப்படல் வேண்டும். சர்வதேச மதிப்பீட்டு நியமங்களுக்கமைய மொத்தப்புள்ளிச் சராசரி வடிவில் அறிக்கை செய்யப்படும்.

**விளையாட்டு கட்டாயம்**

கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் கட்டாய பாடங்கள் தொகுதியில் பதின்நான்கு பாடங்களுடன் விளையாட்டு மற்றும் சங்கங்கள் மற்றும் கழகங்களில் பங்குபற்றுதலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள பாடங்களுடன் வாழ்க்கைத் தொழிநுட்பம், சமயம் மற்றும் விழுமியக்கல்வி, முயற்சியாண்மை மற்றும் நிதிக்கல்வி ஆகிய புதிய பாடங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இந்தப் பிரிவில் கற்கும் அனைத்து மாணவர்களும் ஏதாவதொரு விளையாட்டில் பங்குபற்றுவதும் கழகங்கள் மற்றும் சங்கங்களில் பங்குபற்றுதலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் சிறப்பம்சமாகும். இந்தத் தொகுதிக்கான மொத்த திறமைச்சித்திகள் முப்பது ஆகும். அத்துடன் மேலதிக கற்றலுக்காக கட்டாயபாடத் தொகுதியிலிருந்து விரும்பிய மூன்று பாடங்களைத் தெரிவு செய்து அவற்றுக்கான மேலதிக மொடியூல்களைக் கற்கவேண்டும். மூன்று பாட மொடியூல்களுக்கும் ஒரு திறமைச்சித்தி வீதம் மூன்று திறமைச்சித்திகள் கிடைக்கும். இந்த மேலதிக கற்றலானது விரும்பிய பாடத்துறையில் அல்லது எதிர்கால உயர் கல்விக்கான பாடத்துறையில் ஆழமான கற்றலுக்கு வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் பாடப்பரப்புக்களினூடாக கட்டியெழுப்பப்படும் நிலைமாற்றுத்திறன்களைக் கற்பதற்காக அதற்கென ஒதுக்கப்படும் பாடத்தொகுதியிலிருந்து இரண்டு பாடங்களுக்கான மொடியூல்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

சிரேஷ்ட இடைநிலையின் முதற்கட்டத்திலும் பொதுவான முக்கியமான பாடங்கள் தொகுதி, மேலதிகக் கற்றலுக்கான தொகுதி மற்றும் பாடத்தோடிணைந்த நிலைமாற்றுத் திறன் விருத்திக்கான தொகுதியென மூன்று தொகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. பொதுவான பாடத்தொகுதியில் அனைத்து மாணவர்களும் கற்கும் வகையில் கட்டாய பாடங்கள் ஐந்தும், அத்துடன் அனைத்து மாணவர்களும் நிபந்தனையின்றி இரண்டு பாடங்களைத் தேர்வு செய்து கற்பதற்கான தேர்வுப்பாடத் தொகுதியும் காணப்படும். எனவே ஒவ்வொரு மாணவரும் ஐந்து கட்டாய பாடங்களையும் இரண்டு தெரிவுப்பாடங்களுமாக மொத்தம் ஏழு பாடங்களைக் முதற்தொகுதியிலிருந்து கற்கவேண்டும். ஏழு பாடங்களுக்குமான திறமைச் சித்திகள் தவணைக்கு பதினெட்டு ஆகும். அத்துடன் தரம் பதினொன்றின் இறுதியில் தேசிய மட்டத்தில் சாதாரணதரப் பரீட்சை இந்த ஏழு பாடங்களுக்கு மாத்திரம் நடாத்தப்படும்.

மேலும் மேலதிக கற்றலுக்கான தொகுதியானது கல்வி சார்ந்த புலன்கள் மூன்றினையும், திறன் சார்ந்த புலமொன்றுமாக நான்கு துறைசார் வகுதிகளைக் கொண்டுள்ளது. 1. விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் சார்ந்த வகுதி 2. மனிதநேயம் மற்றும் சமூகவிஞ்ஞான வகுதி 3. முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை வகுதி 4. திறன் விருத்திக்கான வகுதி ஆகிய நான்கு துறைசார் வகுதிகளும் அந்தத் துறைசார்ந்த பாடங்களை உள்ளடக்கிய நான்கு துறைசார் தொகுதிகளாக விளங்குகின்றன. ஒவ்வொரு மாணவரும் விரும்பிய ஒரு துறையினை மேலதிக கற்றலுக்காகத் தெரிவு செய்தல் வேண்டும். தரம் ஒன்பதில் பெற்ற அனுபவம் கற்றற்பேறு என்பன பொருத்தமான துறைசார் தெரிவுக்கு வழிகாட்டும்.

**போலிப் பரப்புரைகள்**

எந்தத் துறையினைத் தெரிவுசெய்த போதும் நிபந்தனைகளுக்கமைவாக அனைத்து மாணவர்களும் மேலதிகமாக ஏழு பாடங்களைக் கற்கவேண்டும். தெரிவு செய்த தமக்குரிய சிறப்புத் துறையிலிருந்து நான்கு பாடங்களை அனைவரும் தெரிவு செய்தல் கட்டாயமாகும். ஏனைய மூன்று பாடங்களும் ஏனைய துறைசார்ந்த அறிவு மற்றும் திறன்களைப் பெற்றுக்கொள்ளும்வகையில் தெரிவுசெய்வதற்கு நிபந்தனைப்படுத்தப்பட்டுள்ளது.

வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் பொதுப்பாடத் தொகுதியில் கட்டாய பாடங்களாகவன்றி விருப்பத் தெரிவுப் பாடங்களாக உள்ளமையால் அந்தப் பாடங்களை அனைவருக்கும் கற்கும் வாய்ப்பில்லையென்பது குறைபாடாக சமூகவலைத்தளங்கள் தொடக்கம் நாடாளுமன்றம் வரைக்கும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுள் உண்மைக்குப் புறம்பானவை. ஏனெனில் மேலதிக கற்றலுக்காக மாணவர்களும் இந்தப் பாடங்களைக் கற்கும்வகையில் ஏற்பாடுகள் உள்ளன.

**(அடுத்தவாரம் தொடரும்........)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வல்வெட்டித்துறையில் எம்.ஜி.ஆரின் பிறந்தநாள்

யாழ்ப்பாணம், ஜன.21

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 109ஆவது பிறந்தநாள் நிகழ்வு வல்வெட்டித்துறை ஆலடியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர்.சதுக்கத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் எம்.ஜி.இராமச்சந்திரனின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. அவரது மக்கள் நேயச் செயற்பாடுகள் மற்றும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீதும் ஈழத்தமிழர்கள் மீதும் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாடுகள் தொடர்பில் வல்வெட்டித்துறை நகரபிதா உரையாற்றினார். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ-41-100)

# யாழ்.போதனா மருத்துவநிபுணர் சரத் விஜேசிங்கவுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.போதனா மருத்துவமனையில் சேவையாற்றிய மருத்துவ நிபுணர் சரத் விஜேசிங்க இடமாற்றம் பெற்றுச்செல்லவுள்ளார். இவர் முகம், தாடை மற்றும் வாய்ப் பகுதிகளில் ஏற்படும் காயங்களைச் சீர்செய்யும் விபத்துச் சிகிச்சைப் பிரிவில் கடந்த 10 வருடங்களாகச் சேவையாற்றிருந்தார். அவருக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.போதனா மருத்துவமனை மண்டபத்தில் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி.த.சத்தியமூர்த்தி தலைமையில் சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. (எ-41-66)



# தைமாதசதுர்த்தி


யாழ்ப்பாணம்,ஜன.21

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தைமாதச் சதுர்த்தி தினப் பூஜை வழிபாடுகள் நாளை வியாழக்கி ழமை மாலை 4 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பூஜை வழிபாடுகள், வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறுமென ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ச-66)

வவுனியா- நொச்சிமோட்டைப் பகுதியில் நெல் ஏற்றிச் சென்ற பார ஊர்தி வீதிக்கு குறுக்கே தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. (க-110)




## மரண அறிவித்தல்



மலர்வு 28 . 07 . 1954

உதிர்வு 19 . 01 . 2026

### திருமதி கலாவதி குணநாதன்

நெடுந்தீவு மேற்கு, 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 122/1 சிவன் கோவில் வீதி, தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி குணநாதன் அவர்கள் கடந்த (19.01.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வைத்தியநாதன் குணநாதன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுதர்சன் (ஆசிரியர் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாதினியின் (ஆசிரியர் வவுனியா குருக்கள் ஊர் அ.த.க. பாடசாலை) பாசமிகு மாமியாரும், மனோகரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), புஸ்பவதி (நெதர்லாந்து), ஜெயவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அபிராஜிதா, மாதங்கி, சுபானுஜன், சுகானுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சிறிபத்மநாதன், சுவாமிநாதன், ஜெயநாதன், மற்றும் தனலட்சுமி, விஜயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (22.01.2026) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**122/1 சிவன் கோவில் வீதி,**
**தோணிக்கல், வவுனியா.**

(CS/60513) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 04 . 1941

மறைவு 20 . 01 . 2026

### திருமதி குமாரவேலு நகுலேஸ்வரி

மலேசியாவை பிறப்பிடமாகவும் டச்சு வீதி, வீமன்காமம் தெல்லிப்பளை, கொயிலாமனை கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு நகுலேஸ்வரி அவர்கள் நேற்று (20.01.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நாகரத்தினம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராசா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரவேலுவின் பாசமிகு மனைவியும், கஜன் (கனடா) அவர்களின் பாசமிகு தாயாரும், வைதேகியின் அன்பு மாமியும், கிசானிகா, கிசாந் ஆகியோரின் அன்புப் பேரத்தியும், காலஞ்சென்ற பஞ்சநாதனின் சகோதரியும், காலஞ்சென்ற உலகேஸ்வரி, தர்மராசா மற்றும் பாலச்சந்திரன், லோகேந்திரன், இராஜேஸ்வரன், குகதாசன், கருணேஸ்வரி, இரகுநாதன், நவரஞ்சன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, குலேந்திரன் மற்றும் மகாலிங்கம், ஞானாம்பிகை, நித்தியானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2026) புதன்கிழமை முற்பகல் 1030 மணிக்கு கொயிலாமனை கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டைபறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 453 1168
077 161 3623

(CS 31054) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடனான கல்விச் சேவை புரிந்து இன்று ( 21.01.2026 ) புதன்கிழமை ஓய்வு பெறும் எமது மதிப்பிற்குரிய ஆசிரியர்

**திருமதி வளர்மதி சோமசேகரம்**
**(SLTS - I , BA , PGDE , MED , Science Trd)**

சேவைக்காலம் : 1992 - 2026 ( 33 வருடங்கள் )

அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு
அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் நீடுழி காலம் வாழவும்
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்**

## மரண அறிவித்தல்



### பத்மநாதன் பரமேஸ்வரி

ஐயனார் கோவிலடி கொக்குவில் மேற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பரமேஸ்வரி கடந்த 19.01.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பாருப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதன் (இளைப்பாறிய மாநகர சபை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், கோமதி, கோமகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகன் (கனடா), நளாயினி (கனடா) ஆகியோரின் மாமியாரும், பாரக்ஷ்வி, நிக்கித்தா (University of Toronto-Canada), ரேவன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சற்குணம், குமாரசாமி, தெய்வேந்திரம், சந்திரமதி மற்றும் கோமதி சுப்பையா (தர்மகர்த்தா, கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்திவிநாயகர் (ஐயனார்) ஆலயம்), யோகேஸ்வரி, மகேந்திரன் (கனடா), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**கோமதி சுப்பையா**
**(கோமதி விலாஸ்-கொழும்பு)**
**077 76 04 772**

(CS 31057) A

## மரண அறிவித்தல்



தோற்றம்
17.04.1938

மறைவு
19.01.2026

### சிற்றம்பலம் துரைராசா

**(முன்னாள் தவிசாளர் - பிரதேசசபை, சாவகச்சேரி,**
**கொத்தணி அதிபர் - வரணி மத்திய கல்லூரி,**
**அதிபர் - முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி,**
**கொத்தணி அதிபர் - அக்கராயன் ம.வி,**
**அதிபர் - பூநகரி ம.வி, ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,**
**தலைவர் - விவசாய சம்மேளனம் - வரணி)**

கரம்பைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும், இடைக்குறிச்சி வரணினை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் துரைராசா அவர்கள் கடந்த (19.01.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உமாமகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் - அபிராமி தம்பதியினரின் மூத்த மகனும், கதிரித்தம்பி வாத்தியார் - பாறுபதிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மருமகனும், திருச்செல்வராசா (பொறியியலாளர் - லண்டன்), திருமதி செல்வராணி வாரித்தம்பி, காலஞ்சென்ற தயானந்தராசா (ஞானவேல்) - மாவீரர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வாரித்தம்பி (ஓய்வுபெற்ற பதிவாளர், நீதிமன்றம்), மனோன்மணி, பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், சிவராசசிங்கம் (சகலன் - ஓய்வுபெற்ற பதிவாளர், நீதிமன்றம்), திருக்குமரன் (லண்டன்), செந்தில்குமரன் (நோர்வே), சியாமளா (பல்மருத்துவர் - லண்டன்), இளங்குமரன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), குன்றக்குமரன் (இயந்திரவியலாளர்), காலஞ்சென்ற இராசக்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீரஞ்சினி (லண்டன்), கௌசலை (நோர்வே), தாமோதரன் (பொறியாளர்-லண்டன்), மேகலா (ஆசிரியை-யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை), மதிவதனி ஆகியோரின் மாமனாரும், பலராம், சீத்தாராம், லக்ஸ்மன், மதுஷன், சௌமியா, கவின், ராம்குமரன், மகிழினி, கவின்குமரன், புகழினி, அபிஷா, மியூனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2026) புதன்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் இடைக்குறிச்சி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொடிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இடைக்குறிச்சி,**
**வரணி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 352 5339**

(CS/60515) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள்...

தார். பலாலியில் நடைபயணமும் மேற்கொண்டார். வடக்கு கிழக்கில் எத்தனை காணிகளை விடுவித்தனர்? என்று கேட்டால், இரண்டு வீதிகளைத் தவிர, காணிகள் எவற்றையும் விடுவிக்கவில்லை. மாறாக மேலதிகமாக காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களில் அந்தச் சுவீகரிப்புகள் நடக்கின்றன. வடக்கில் அமைதியானதும், பாதுகாப்பானதுமான சூழல் நிலவுகின்றது. இது அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். எனவே, மேலதிக காணிகளைப் பிடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மக்களின் காணிகள் இன்னமும் அவர்களின் வசம் உள்ளது. மீள்குடியேற்றத்துக்கு உதவியாக அனைத்துக் காணிகளையும் விடுவிக்க அரசாங்கம் முன்வரவேண்டும் - என்றனர். (அ-ம-26)

## மாகாணசபைத்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சிறுபான்மை மக்களுக்குத் தீர்வாகவே மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. அதை நாங்கள் எமக்கான தீர்வாக ஏற்காவிட்டாலும்கூட, அதைத் தீர்வு என்று கூறியே கொண்டு வந்தனர். ஆனால், கடந்த ஏழு, எட்டு வருடங்களாக மாகாணத் தேர்தலை நடத்தாமல் காலம்தாழ்த்தி வருகின்றனர்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியதும், ஒரு வருடத்துக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று உறுதியளித்தது. எனினும், இன்னமும் தேர்தல் நடத்தப்படவில்லை. மாறாக, மாகாணசபைத் தேர்தலை பிற்போடும் செயற்பாடுகளைத்தான் மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தலுக்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படும் எனத் தற்போது கூறுகின்றனர். நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்தால், அடுத்ததாக என்ன நடக்கும் என நாங்கள் அனைவரும் அறிவோம். எனவே, இந்த இழுத்தடிப்பு முயற்சிகளைக் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

இருக்கின்ற முறையில் மாகாணத்தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். நாங்கள் தேர்தல் மறுசீரமைப்புக்கு எதிரான நபர்கள் அல்லர். ஆனால், தேர்தல் மறுசீரமைப்பைக் காரணமாகக் கூறிக்கொண்டு தேர்தலைத் தாமதப்படுத்தும் செயற்பாடுகளுக்கு எதிரானவர்கள். எனவே, நொண்டிச் சாட்டுக்களைக் கூறிக்கொண்டிருக்காது தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

## அரசைப்...

டுள்ளது. தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உள்ள ஆபத்தான அம்சங்களை விடவும், அதற்கு மாற்றாகக் கொண்டுவரப்படும் 'பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தில்' மிகவும் ஆபத்தான விடயங்கள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்ட தாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. அதற்குப் பதிலாக புதிய சட்டங்கள் கொண்டுவரப்படக்கூடாது. இந்த விடயத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டங்களை இயற்றுவதற்கு இதற்கு முன்னரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அது தொடர்பான கலந்துரையாடலில் ஜே.வி.பி.யினர் பங்கெடுக்கவேயில்லை. ஏனெனில், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றுச் சட்டங்கள் அவசியமற்றவை என்பது அவர்களின் ஒற்றை நிலைப்பாடு. அத்தகையவர்கள் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் மோசமான சட்டமொன்றை இயற்றுவதற்கு எத்தனிப்பது நகைப்புக்குரியது - என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (அ-ம-26)

## இராணுவச்...

டுக்கான முதலாவது மாதாந்த அமர்வு நகரபிதா வின்சன் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே நகரபிதாவால் குறித்த தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றபட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தை அண்மித்து அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தின் சிற்றுண்டிச்சாலையில் தினமும் ஏராளமான புகைபொருள்கள் விற்கப்படுகின்றன. இதையடுத்து, கடந்த 13ஆம் திகதியன்று, நகரபிதா வின்செண் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் உள்ளிட்ட குழுவினர் குறித்த இராணுவ விற்பனை நிலையத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

இதன்போது வியாபார உரிமம் பெறப்படாது செயற்படுகின்றமை கண்டறியப்பட்டு, உரிய அனுமதிகளைப் பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அந்த அறிவுறுத்தலை இராணுவத்தினர் ஏற்றுக்கொண்ட போதிலும், தொடர்ச்சியாக குளிர்பானங்களையும் போதைப்பொருள்களையும் விற்று வந்துள்ளனர். இதையடுத்தே, குறித்த இராணுவச் சிற்றுண்டிச்சாலையில் புகைத்தல் விற்பனை செய்வத்தை தடை செய்வதென்றும், நகரசபை சட்டங்களுக்கு உட்பட்டு உரிய அனுமதி பெறப்படாது தொடர்ந்து செயற்படுமிடத்து அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## பயங்கர...

சுட்டிக்காட்டியுள்ளார். பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்காக முன்மொழியப்பட்ட சட்ட வரைபு தொடர்பான திறந்த கலந்துரையாடல், சட்டம் மற்றும் கொள்கைகளுக்கான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்பில், தந்தை செல்வா கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இதன்போது சட்டத்தரணி குருபரன் மேலும் கூறியதாவது:-

தமிழர் தரப்பினுடைய நிலைப்பாடு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் அதற்குப் பதிலீடாக வேறெந்தச் சட்டமும் தேவையானது அல்ல என்பதுமே. மேலும் தற்போது நிலவுகின்ற தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறைக் கோவை மற்றும் இதர குற்றவியல் சட்டங்களின் ஏற்பாடுகளில் பேருக்குப் பின்னரான சமூக நிலைமை கையாளப்படக் கூடியது. அதற்கென தனித்து பயங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் தேவையில்லை.

சர்வதேசச் சட்டத்தில் இதுவரை ஏற்கப்பட்ட பயங்கரவாதமென்ற சொற்தொடருக்கான வரைவிலக்கணம் இல்லை. ஆனால், தற்போது உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தில் பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணமானது மிகவும் நெகிழ்வுப் போக்கான நிலையிலே அனைத்தையும், எதையும் உள்வாங்கலாம் என்ற தொனியிலே முன்வைக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்தல், பொதுமக்கள் ஒன்றுகூடக் கூடாதென்ற அறிவித்தலை வழங்கல், கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தடை விதித்தல் போன்ற அவசரகால தடைச் சட்டத்தின் தற்காலிகக் கட்டளைகளை மேற்கொள்ளும் விடயங்களைக் கூட நிரந்தரச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகின்றது - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வேலன் சுவாமிகள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சர்வேஸ்வரன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் மு.கோமகன், கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் இன்பம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் யசோதரன், சமூக செயற்பாட்டாளர் முரளிதரன் உள்ளிட பலர் இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர். (அ-ம-26)

## வடதாரகைப்...

கடற்படைக் கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளார்.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் என். பிரபாகரன் மற்றும் வடபிராந்தியக் கடற்படைக் கட்டளைத் தளபதி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவில் அமைந்துள்ள கடற்படைத் தளத்தில் நடைபெற்றது.

இதன்போது, நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையயேயான கடற்போக்குவரத்தில் அண்மைக் காலமாக எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரபாகரன் தெளிவுபடுத்தினார். அன்றாட சேவையில் ஈடுபட்டுவந்த வடதாரகை, குமுதினி மற்றும் சமுத்திரதேவாப் படகுகள் சமகாலமாகச் சேவையில் ஈடுபட முடியாத நிலையில், மக்களின் இடர்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் வடதாரகைப் படகை மீண்டும் இயக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

இதையடுத்தே, நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே வடதாரகைப் படகை மீண்டும் இயக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடபிராந்தியக் கடற்படைக் கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் வடபிராந்தியக் கடற்படைத் தளத்தின் உயரதிகாரிகள் மற்றும் நெடுந்தீவு கடற்படைத் தளத்தின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ-ம-66)

## எதிர்க்...

தெரிவித்தார். தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுவிட்சர்லாந்தில் இடம்பெற்றுவரும் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் பிரதமர் ஹரிணி, எதிர்வரும் 23ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். முடிந்தால் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்குமாறு எதிர்க்கட்சிக்குச் சவால் விடுகின்றோம். நம்பிக்கையில்லாப் பிரேரணையை வழங்க முடியாமல் இருப்பதில் இருந்து எதிர்க்கட்சிகளின் பலவீனம் புலனாகின்றது - என்றார். (அ-ம-44)

## பிரதமருக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகின்றனர். இதையடுத்தே, பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உரிய நேரத்தில், உரியவாறு கொண்டுவரப்படும் என்று நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் வைத்து சஜித் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இன்னமும் கையொப்பமிடவில்லை. அவர்களின் கையொப்பங்களையும் பெற்ற பின்னர் நிச்சயம் பிரேரணை கொண்டுவரப்படும். மற்றும்படி, நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு எமக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்றும் சஜித் கூறியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் மேற்கொள்ளத் திட்டமிட்ட கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். முடிந்தால் அத்தகைய விவாதத்தை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

## தமிழர்களின்...

தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் தற்போது புதிய அரசியலமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பணிகள் எவ்வாறு அமைய வேண்டும், இதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை என்பன தொடர்பில் நாங்கள் எமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம். அதற்கேற்ப, அனைவரையும் ஒன்றிணைத்து பரந்துபட்ட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அது எவ்வளவுதூரம் சாத்தியப்படும் என்பது தொடர்பில் தெரியவில்லை. எனினும், இன்றைய காலச்சூழலில் தமிழர்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் ஆவணமொன்றைத் தயாரித்து வழங்குவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். மிக விரைவாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். இவ்வாறன ஆவணங்கள் இதற்கு முன்னரும் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, அவற்றையும் ஆராய்ந்தே இந்தப் பணிகள் இடம்பெறும். தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் ஏனைய கட்சிகளும் இந்தப் பணிகளில் கலந்துகொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் 'கறுப்பு ஜனவரி'

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு இதுவரை முழுமையான நீதியினைப் பெற்றுத் தர முடியாத நிலை தொடரும் பின்னணியில், சுதந்திர ஊடக இயக்கம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் 'கறுப்பு ஜனவரி' நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

'இருளைப் போக்கக்கூடிய வழி' என்ற கருப்பொருளின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஊடக அமைப்புகள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில், படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுகூரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் பேராசிரியர் சாவித்ரி குணசேகர, மூத்த ஊடகவியலாளர் விஜயானந்த ஜயவீர மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும ஆகியோர் பங்கேற்று கருத்துகளைப் பகிர்ந்தனர். (ச-இ)

## கல்லுண்டாய் குப்பைமேட்டில் நேற்று மீண்டும் பற்றியது தீ!

யாழ்ப்பாணம், ஜன. 21

கல்லுண்டாய் வெளியில் உள்ள குப்பை மேட்டில் நேற்று இரவுமுதல் திடீரென தீ பரவி வருகின்றது எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையால் அகற்றப்படும் குப்பைகளைச் சேகரிக்கும் நிலையத்திலேயே இவ்வாறு தீவிபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குத் தெரிவிக்கப்பட்டதும், அங்கு சென்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஊழியர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்தக் குப்பை மேட்டில் கடந்த காலங்களிலும் இவ்வாறு தீப்பரவல்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



சட்டவிரோத சொத்துச்சேர்ப்பு

# 28 கோடி ரூபாவுடன் சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜன.21

சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சுமார் 28 கோடியே 33 இலட்சம் ரூபா பணம் மற்றும் இரண்டு சொகுசு வாகனங்களுடன் நபர் ஒருவர் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் இப்பாகமுவ பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, இந்த நபர் வெளிநாட்டில் மறைந்திருப்பதாகக் கருதப்படும் ஒரு சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரருடன் நீண்டகாலமாகத் தொலைபேசி ஊடாகத் தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். வெளிநாட்டில் வசிக்கும் நபரின் அறிவுறுத்தலின் பேரில், இலங்கையிலுள்ள ஏனைய போதைப்பொருள் வியாபாரிகளிடமிருந்து பணத்தைச் சேகரித்து அதனை மோசடி முறையில் பரிமாற்றும் 'இடைத்தரகராக' இவர் செயற்பட்டுள்ளார். இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு வாகனங்களும் போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்ட கறுப்புப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டவை என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (ச-இ)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.21

கொக்குவில் இந்துக்கல்லூரியில் தரம் 6 புகுமுக மாணவர்களுக்கான கால்கோள்விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். கல்லூரி அதிபர் பெ.வசந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், சுனடா பழைய மாணவர் சங்கச் செயலாளர் லோகன் குமரேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-17)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து 1/2 km தொலைவில், மாட்டீன் வீதியில், சகல வசதிகளையும் உடைய மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 833 1234

(CS 60999) E

## A/L- வரலாறு

மாவட்ட, தேசிய சாதனைகளை பலமுறை உருவாக்கிய உங்கள் ஆசிரியர்
M.பத்மன் B.A(Hons) History, M.A (History) M.E.D

கற்பிக்கும் இடங்கள்
- D.M.I - ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
- உயர்கலைக்கல்லூரி - குளப்பிட்டி, கொக்குவில்.
- BITSMANS - மானிப்பாய்.

A/L 2K26 - புதிய அனுமதிகள் வழங்கப்படும் (இறுதி சந்தர்ப்பம்)
A/L 2K27 - புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
D.M.I நிறுவனத்தில் A/L - 2K27 Batch இருபிரிவுகளாக
பிரிவு - I சனி, ஞாயிறு 10 - 11 am, பிரிவு - II சனி,ஞாயிறு 11-12am

தொடர்புகளுக்கு - 077 482 5587

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியில் 9 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

### நிலப்பரப்பு

- நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 600 m தூரம்
- பலாலி சர்வதேச விமான நிலையம் 4 Km தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- வீடுகள் கட்டுவதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 30 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 25 லட்சம் வரையும் உள்ளது.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(CS/31047) J-1

தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 986 5457

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 01 . 1971
மறைவு 20 . 01 . 2026

### குலவீரசிங்கம் சுதந்திரபாலன் (கிளி)

கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, கெருடாவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் சுதந்திரபாலன் அவர்கள் நேற்று (20.01.2026) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதி குலவீரசிங்கம், கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜினியின் அன்புக் கணவரும், அனோஜா, சுலக்ஷன், ஐஸ்வர்யா, சுவேதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கலையரசன், டனுஷா, கலையரசன் (லிது) ஆகியோரின் அன்பு மாமனாரும், கலைவாணி (உதவிப் பணிப்பாளர், கொழும்பு) விரதசாரணி (ஆசிரியை), காலஞ்சென்ற தேவபாலன், உதயபாலன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இந்திரபாலன், அமிர்தசாரணி, தாட்சாயணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மகேந்திரன், பாலகிருஷ்ணன், புவனா (பிரான்ஸ்), செல்வக்குமரன், மோகனதாஸ் (இத்தாலி), அருள்நேசன் (ஜேர்மனி), சிவனேசன், அனுரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக நாளை (22.01.2026) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 31058) A
தொ. பே. இல. 0779451442 / 0779120058



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org